**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(09.08.2022 முதல் 13.08.2022 )***

***அறிக்கை எண் 063/2022*** ***தேதி.08.082022***

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 16°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.*

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (05.08.2022 முதல் 07.08.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05/08 | 06/08 | 07/08 | தேதி | நாள்-1 09/08 | நாள்-2 10/08 | நாள்-3 11/08 | நாள்-4 12/08 | நாள்-5 13/08 |
| 52.4 | 19.5 | 19.7 | மழை (மி.மீ) | 25 | 18 | 8 | 8 | 4 |
| 26 | 28 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 29 | 31 | 31 | 31 |
| 22 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 21 | 21 | 21 | 21 |
| 8 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 6 | 6 | 5 |
| 81 | 88 | 88 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 83 | 81 | 75 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 23 | 27 | 25 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 18 | 18 | 18 | 18 |
| 230 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (09.082022 முதல் 13.08.2022)

*வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 31°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக*

திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 09-08-2022 | 36 | 21 | 27 | 34 | 38 | 35 | 34 | 34 | 32 | 21 | 28 | 39 |
| 10-08-2022 | 42 | 26 | 34 | 43 | 51 | 46 | 40 | 40 | 43 | 27 | 37 | 50 |
| 11-08-2022 | 30 | 13 | 18 | 24 | 24 | 21 | 26 | 26 | 20 | 14 | 17 | 26 |
| 12-08-2022 | 12 | 6 | 8 | 11 | 12 | 11 | 11 | 11 | 10 | 6 | 8 | 12 |
| 13-08-2022 | 7 | 2 | 3 | 5 | 5 | 4 | 6 | 6 | 4 | 2 | 3 | 6 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உயரமான பயிர்களுக்கும் கால்நடைக் குடில்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>மழையினால் கிடைக்கும் அதிகப்படியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிப்பதன் மூலம் தேவைப்படும்போது மீண்டும் உபயோகிக்கலாம். |
| நெல் | நடவு | லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் பயிர் நடவு செய்வதனை தகுந்த வடிகால் வசதியுடன் தொடரவேண்டும்.<br>வரும் நாட்களில் மணிக்கு **18** கிலோமீட்டர் அளவில் காற்றின் வேகமும் மேகமூட்டமும் எதிர்பார்க்கப்படுவதால் **30** நாட்கள் வயதுடைய நெல்லிற்கு தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டாம். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, மக்காச்சோள விதைப்பைத் போதிய வடிகால் வசதியுடன் தொடர வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி போதிய வடிகால் |

| | | |
|---|---|---|
| | | |
| பருத்தி | | எதிர்பார்க்கும் மழையினைப்பயன்படுத்தி ஆகஸ்டு 15ம் தேதிக்குள் பருத்தி விதைப்பினை முடிக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | வளர்பருவம் | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 18 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்கவும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும்.<br><br>கடந்த வாரங்களில பொழிந்த மழையால் கரிசல் மண்ணில் சாகுபடி செய்யப்பட்ட பின்பட்ட கரும்பில் இரும்புச்சத்து குறைபாடு காணப்படுகிறது. இதை நிவர்த்தி செய்ய 15 நாட்களுக்கு ஒருமுறை 1 சதம் அன்னபேதிஉப்பையும் மற்றும் 1 சத யூரியாவையும் கலந்து தெளிக்கவும். |
| தக்காளி | நடவு | தக்காளி நடவு செய்யயும் பொழுது மழை எதிர் பார்க்கபடுவதால் பார்களில் நடவு செய்வது உசிதமாகும். |
| கொடிவகை பயிர்கள | விதைப்பு | ஆடிப்பட்டம் கொடிவகை பயிர்களான பீர்க்கங்காய், பாவற்காய், புடலைங்காய் போன்ற பயிர்களை விதைப்பதற்கு உகந்த காலமாகும். ஆதலால் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் விதைப்பு எடுக்குமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக மஞ்சள் பயிரில் ஏற்படும் வேர் அழுகல் நோயைத் தவிர்க்கும் வகையில் நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிம் அல்லது 1000 கிராம் மேன்கோசெப் அல்லது 1250 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| தென்னை | | தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிட்டு காற்றின் வேகத்தை குறைக்க வேண்டும்.<br>தொடர்மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை மற்றும் கோழிகூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

- மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உயரமான பயிர்களுக்கும் கால்நடைக்

***முதன்மைஅலுவலர் (GKMS)***
***வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்***
***த.நா.வே.ப.கழகம், கோவை***